நிதிபசுபாசனமொம்பியராடவர்நேயமுடன்
வதிபசுபாசனமிக்கபெய்பால்வளமன்னுகச்சி
யதிபசுபாசனகாதியருக்கருளையவெற்குப்
பதிபசுபாசனவின்முப்பொருளும்பகர்ந்தளியே. (௧௨)

அளியளித்தானந்தவத்தருஞ் செல்வமமைந்தகச்சித்
தளியளித்தானந்தமாவுறைகம்பனைச்சாரலர்போல்
விளியளித்தானந்தநந்தனீங்கும்விதமகிண
வெளியளித்தானந்தவாயென்றகன்றீட்டல்யார்தனமே. (௧௩)

தனையனையாதரிநாணமுலைப்பாறருகவென்னு
முனையனையாதரிகந்தோடத்தந்தமுதுசண்பைபோல்
வினையனையாதரியெனவேவிதியில்லைமேவுகச்சி
நினையனையாதரிபன்னிருநாமந்னைப்பித்ததே. (௧௪)

நினைக்கவிசித்திரமாங்கம்பபுண்ணியைநேர்ந்துமிடை
தனைக்கவிசித்திரகாயத்துரியொடுஞ்சார்ந்துபத்தூர்
மனைக்கவிசித்திரமேற்றுண்டுகச்சிமயானம்வைகு
முனைக்கவிசித்திரநாவலர்பாடியுருகுமன்பே. (௧௫)

உருவோணகாந்தன்புகழேரனெங்கையையுள்ளன்பினுள்
பொருவோணகாந்தன்வடிவென்றருந்துபொதுத்தம்பலந்
திருவோணகாந்தன்றளிக்கச்சியேகம்பர்சீரருளால்
வருவோணகாந்தன்றுணைமைந்தன்வாய்நாறுமாண்புடைத்தே ( )

மாணிக்கம்பச்சைநிறங்கம்பநாதனைவந்துதிரு
வாணிக்கம்பச்சைதுதிகச்சியூரன்பொய்வார்த்தையெல்லாம்
பாணிக்கம்பச்சைவலங்குழலென்பாணபாடவட்கே
நாணிக்கம்பச்சைநுகரனைவேற்கென்சொனுட்டுவதே. (௧௭)

நாட்டுஞ்சுவர்க்கமெனவேமறைகணவிலுங்கச்சி
யீட்டுஞ்சுவர்க்கமகிழ்திருவேகம்பரின்னருளிற்
றேட்டுஞ்சுவர்க்கவராதேநினைக்கச்சுகமெனக்கே
காட்டுஞ்சுவர்க்கமிரண்டார்ந்தகக்சிகனங்குழையே. (௧௮)

கனகச்சிமயமுருகநெஞ்சின்வடுகாட்டுமிரு
தனகச்சிமயமகட்கொருபாகந்தருங்கம்பன்வாழ்
வனகச்சிமயனிருமிக்கும்வேறுவளநகர்க்கு
மினகச்சிமயவருக்குவிண்டொண்டர்க்குவேதண்டமே. (௧௯)

தண்ணியனேகருவார்கச்சியேகம்பசங்கரனே
கண்ணியனேகருனுமம்புகழ்வதுகண்டுவந்து
நண்ணியனேகருணாகரனேயெனநாளுஞ்சொற்றேன்
புண்ணியனேகருமேதல்பிழைவாழிநின்பூம்பதமே. (௧00)

**திருக்கச்சியேகம்பர் திரிபந்தாதி முற்றிற்று.**

---

## திருவேகம்பநாதர் கும்பாபிஷேகச்சிறப்பு.

### வெண்பா.

அகரத்தார் கச்சி யமர்ந்தருளே கம்பர்
சிகரத்தார் கும்பாபிஷேக—நகரத்தார்
செய்வித்தா ரெங்கண்மனந் தென்படைய வன்னோர்கள்
வையகத்தின் வாழ்க மகிழ்ந்து.

### பதினொன்றுசீர்க்கழிநெடிலடி இரட்டையாசிரியவிருத்தம்.

மாவோங்கு சீர்க்கச்சி யேகம்ப நாதனூர் வாழுமூ லத்தானவுள் - வர்னசொர்ன விமானமும் புறமகத் தீசர் வளருமார்க் கண்டேசர் நல், வடவாலி னுறைகின்ற தட்சிணா மூர்த்தியுயர் மத்தளம் மாத வேசர் - மகிழ்கசா னனர்கந்தர் சண்டேச ரொளிர் நால்வர் வாய்ந்தவறு பத்து மூவர், காவோங்கு நவர்நிலாத் தொண்டமால் பிரளயம காசத்தி யும் புறத்துக் - காட்சியுச் சவமூர்த்தி யேலவார் குழலம்மை கதிர்வேலர் மாவடியினிற், களிகொள்சோ மாஸ்கந்தர் மாசகத் ரோசரிவர் காதலா ய் வதியுமந்த்ரங்-கனகமணி மண்டப மகோன்னத ஸ்தூபிதங் கக்கலச மனுவெட்டினாற், றாவோங்கு தம்பவா வரணமுத லாவினுஞ் சொல் லரிய பணிகள் செய்தே - தூண்மொ வலினராய்ப் புகழ்வதொர் விகா ரியிற் றொடர்மகர ரவியினிருபான், சூழ்மூன்றின் வருமாதி வாரமதி பஞ்சமி துலங்கிரோ வதிசிவன்பேர் - துதையோக மெய்ப்பத்ர வாகர ண முங்கூடு சுபதினத் துதையகாலைக், கோவோங்கு மீனலக் கின முகூர்த் தத்தினிற் கோதிலா வேதாகமங் - கூறுமுறை யாகநிறை வே ற்றியனதாஹுதி குறையிலாமற்புரிந்து, கோலமாலாதியர்கள் போற்ற மறை தேவார கோஷமுற நகரவசியர்-கும்பாபி ஷேகஞ்செய் வித்த காட்சியையென்ன கூறுகே னவர்வா ழியே. (க)

இங்ஙனம்:

**புராணிகர் - சோணாசலமுதலியார்.**